எல்லோருக்குமான தலைவர் அண்ணல் அம்பேத்கர்!

வில்லியம் ஷேக்ஸ்பியர் தனது 'ட்வெல்த்நைட்'நாடகத்தில்இப்படி ஒருவசனம்எழுதியிருப்பார்.'சிலர் உயர்ந்த மனிதராகப் பிறக்கின்றனர், சிலர் தங்கள்சாதனைகளால்உயர்வைஅடைகின்றனர், சிலரை உயர்வு தேடிவந்துவிடுகிறது.' இவை தவிர இன்னொரு பிரிவையும் சேர்க்கலாம். அதாவது, சிலரின் உயர்வும் உண்மையான பெருமையும் அவர்கள் மறைந்து நீண்டகாலம்கழித்தே உணரப்படும். அதன்பின் அவர்களின் பெருமை நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே இருக்கும். பாபாசாகேப் அம்பேத்கர் இந்த நான்காவது வகையைச் சேர்ந்தவர்.

அம்பேத்கரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியதனஞ்செய்கீர்சொல்வதன்படி,1956 டிசம்பர்6ம்தேதிஅம்பேத்கர்மறைந்தபோது, 'இந்தியாவில் அதிகம் வெறுக்கப்பட்ட மனிதராக' அம்பேத்கர் இருந்தார். அவர் மறைவின்போதுபிரதமர்ஜவஹர்லால்நேருசுருக்கமான அஞ்சலிக் குறிப்பு ஒன்றை வெளியிட்டார். 'இந்திய அரசியலில் மிகவும் சர்ச்சைக்குரிய ஒரு நபர்' என்று அதில் நேரு குறிப்பிட்டார்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வாழ்நாள் முழுக்க ஓயாமல் உழைத்த ஒரு தலைவர், இந்திய அரசியலமைப்பு சட்டத்தை வடிவமைத்த சிற்பி, சிறப்பாக செயல்பட்ட மத்திய அமைச்சராக 8 ஆண்டுகள் இந்த தேசத்தின்

கட்டமைப்புக்கு அடித்தளம் இட்டவர்… (பிரிட்டிஷ்காலத்தில்வைசிராய்நிர்வாகக்கவுன்சிலில் தொழிலாளர், நீர்ப்பாசனம் மற்றும் நிலக்கரிஅமைச்சராகஅம்பேத்கர்பணியாற்றினார். பிறகு சுதந்திர இந்தியாவின் முதல் சட்டஅமைச்சராகஇருந்தார்.)இத்தனைபெருமைகள் கொண்ட அம்பேத்கர் ஏன் இப்படி அப்போது நினைவுகூரப்பட வேண்டும்?

சமூக சீர்திருத்தத்திற்காக தான் எடுக்கும் முயற்சிகள் தன்னை பெரும்பான்மை இந்தியர்கள்மத்தியில்வெறுக்கப்படும்நபராகமாற்றிவிடும் என்பதை அம்பேத்கர் அறிந்திருந்தார். ஆனாலும் அவர் அதைத் தொடர்ந்து செய்தார். "சமூகக் கொடுங்கோன்மையுடன் ஒப்பிடும்போதுஅரசியல்கொடுங்கோன்மை ஒன்றுமே இல்லை. அரசின் கொடுங்கோன்மையை எதிர்க்கும் ஒரு அரசியல்வாதியைவிட, சமூகக்கேடுகளைஎதிர்க்கும்ஒருமறுமலர்ச்சியாளர்மிகுந்ததீரமுள்ளவராக இருக்க வேண்டும்" என்று அம்பேத்கர் சொன்னார்.

அம்பேத்கரின் வீழ்ச்சியும் எழுச்சியும்!

பெரும்பான்மை மக்களால் வெறுக்கப்படும்நபராக அம்பேத்கர் ஏன் மாறினார் என்பதற்கு சில காரணங்கள் உண்டு:

இந்துசாதிஅமைப்பும்தீண்டாமைஎன்ற நடைமுறையும் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்டமக்களை ஒடுக்குகின்றன என்பதால்அவற்றை அவர்எதிர்த்தார். அவர்எழுதிய'சாதியைஅழித்தொழித்தல்'(1936),'சூத்திரர்கள்யார்?'(1947),'தீண்டப்படாதவர்கள்' (1948) போன்ற நூல்கள் அனைத்தும், யாருமேமறுக்கமுடியாததகவல்கள்மற்றும் வாதங்களைக்கொண்டவை.'செங்கல்சுவர் போலவோ, முள்கம்பிவேலிபோலவோசாதி என்பது கண்ணுக்குத் தெரியும் ஒரு பொருள் அல்ல. சாதி என்பது அழுத்தமாக மனத்தில் இருக்கிறது. அதுமற்றவர்களுடன்இணையவிடாமல் மனத்தடையை இந்துக்களுக்கு ஏற்படுத்துகிறது. அந்த மனச்சுவரை அகற்ற வேண்டும்' என்று எழுதுகிறார் அம்பேத்கர். 'தீண்டாமைஎன்பதுசாதிஅமைப்புஉருவாக்கிய ஒரு விஷயம்தான். சாதிகள் இருக்கும் வரைதீண்டாமைஇருக்கும்.சாதிஅமைப்பை அழிப்பதுஒன்றே,தீண்டாமையால்பாதிக்கப்படுவோருக்கு மீட்சி தரும்' என்று குறிப்பிடுகிறார். தீண்டப்படாதாரின் உரிமைகளுக்காக அவர் அமைதிவழியில் பல போராட்டங்களையும் நடத்தினார்.

மகாத்மா காந்தியையும் பிற காங்கிரஸ் தலைவர்களையும்அம்பேத்கர்வெளிப்படையாக விமர்சனம் செய்தார். 1944ம் ஆண்டு பிரிட்டிஷ்பத்திரிகையாளர்பெவர்லிநிகோல்ஸ் என்பவருக்குஅளித்தபேட்டியில்அம்பேத்கர் இப்படிச்சொல்கிறார்:"இந்தியாவில்தீண்டப்படாத மக்கள் இதுவரை எதிர்கொண்ட எதிரிகளில்காந்தியேமிகமோசமானவர்.'என்னை நம்புங்கள் சாதி இந்துக்களை நம்புங்கள்' என்று காந்தி எங்களிடம் சொல்கிறார். 'நாங்கள் உங்களை நம்ப மாட்டோம், ஏனெனில் நீங்கள்தான் எங்கள் பரம்பரை எதிரிகள்' என்றுநான்சொல்கிறேன்."அம்பேத்கர்1945ம் ஆண்டு எழுதிய 'காங்கிரஸும் காந்தியும் தீண்டாதாருக்குச் செய்தது என்ன?' என்ற நூலிலும்இப்படிகடுமையானவிமர்சனங்கள் வைத்தார்.

நாங்கள்இந்துக்களில்ஒருதுணைப்பிரிவு அல்ல,இந்தியதேசியவாழ்வில்நாங்கள்ஒரு தனிப்பிரிவு' என்பதையே அம்பேத்கர் தன் கொள்கையாக அறிவித்தார். தாழ்த்தப்பட்டவர்களுக்கு இரட்டை வாக்குரிமையுடன் கூடிய தனித்தொகுதிகள் வேண்டும் என்று அவர்போராடினார். அதுவேதங்களுக்குஅரசியல் அதிகாரத்தைக் கொடுக்கும் என அவர் நம்பினார். ஆனால், நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் தாழ்த்தப்பட்டோருக்கும்பழங்குடிமக்களுக்கும்தனித்தொகுதிகள் மட்டுமே கிடைத்தன.

ஆண்டாண்டுகாலமாகஒடுக்கப்பட்டசமூகங்களைச்சேர்ந்தவர்கள்,மற்றசமூகங்களுடன்போட்டியிட்டு மேலே வர வேண்டுமென்றால் அவர்களுக்கு சில முன்னுரிமைகள் வேண்டும் என்று அம்பேத்கர் வாதிட்டார். அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 15 மற்றும் 16ன் அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பில்இடஒதுக்கீடுகிடைப்பதற்கு அவரே வழிவகுத்தார். இதனாலும் அவர் மேல்சாதிஎன்றுகருதப்பட்டவர்களின்கோபத்துக்கு ஆளானார்.

சுதந்திர இந்தியாவின்முதல்சட்டஅமைச்சர் (1947-51) என்ற முறையில் அவர் இந்து தனிநபர் சட்டத் திருத்த மசோதாவை உருவாக்கி நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்தார். பாரம்பரியமான இந்து சட்டங்களை நவீனப்படுத்தும் முயற்சி அது. பலதாரத் திருமணத்துக்குத் தடை, பெண்களுக்கு விவாகரத்து உரிமை, பெண்களுக்கு சொத்துரிமை என்று பல முற்போக்கான அம்சங்கள் அதில் இருந்தன. காங்கிரஸுக்குஉள்ளேயும்வெளியேயும் இருந்த பழைமைவாதிகள் அதைக் கடுமையாக எதிர்க்க, அந்த மசோதா நிறைவேறவில்லை. எனவே, 1951 செப்டம்பரில் அம்பேத்கர்அமைச்சர்பதவியைராஜினாமா செய்தார். (பாபாசாஹிப் வாழ்நாளிலேயே இவற்றைநான்குவெவ்வேறுசட்டங்களாகப் பிரித்து பிற்காலத்தில் நேரு சட்டமாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது!)

'நான் இந்துவாகப் பிறந்தேன், ஆனால் இந்துவாக சாக மாட்டேன்' என அம்பேத்கர் வெளிப்படையாக பிரகடனம் செய்தது பெரும்சர்ச்சையைஏற்படுத்தியது. தான்இறப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பாக, சுமார் ஐந்து லட்சம் ஆதரவாளர்களுடன் இணைந்து அவர் பௌத்த மதத்துக்கு மாறினார்.

அம்பேத்கருக்கு150ஆண்டுகளுக்குமுன்பாக வாழ்ந்த தாமஸ் பெய்னுக்கு ஏற்பட்ட கதியே, இந்தக் காரணங்களால் அம்பேத்கருக்கும்ஏற்பட்டது. தாமஸ்பெய்ன்அமெரிக்க சுதந்திரப்போர் மற்றும் பிரெஞ்சுப் புரட்சி என இரண்டு நாடுகளின் விடுதலைகளில் பங்கெடுத்தவர். பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு அமைந்த அரசாங்கத்தில் எம்.பி பதவி வகித்தவர். அமெரிக்கதேசத்தைநிறுவியதலைவர்களில் ஒருவர். என்றாலும், 1794ம் ஆண்டு தாமஸ்பெய்ன்எழுதிய'பகுத்தறிவின்காலம்' (AgeofReason)என்றநூலுக்குஎழுந்தஎதிர்ப்பின் காரணமாக அவரது பெயரே அமெரிக்க வரலாற்றிலிருந்து அழிக்கப்பட்டது. பைபிள் மற்றும் கிறிஸ்தவ மதம் குறித்து அவர் அந்த நூலில் கடுமையாக விமர்சனம் செய்திருந்தார். அந்தஒற்றைக்காரணத்துக்காகஅவரது வாழ்நாள்சேவைகளைமறுக்கவும்நிராகரிக்கவும் செய்தார்கள்.

அதேபோலவே 1956 முதல் 1990 வரை அம்பேத்கரின் பெயரை மக்கள் நினைவிலிருந்து அழிக்க ஒரு மௌனச் சதி நடைபெற்றது. பள்ளிப் பாடநூல்களில்கூட அவர் பெயரை போகிற போக்கில் சொல்லியிருப்பார்கள். அல்லது அவரின் சேவைகளை சொல்லாமலே தவிர்த்திருப்பார்கள். சட்டம், பொருளாதாரம், சமூகவியல் மற்றும் அரசியல்அறிவியல்சார்ந்துஆழ்ந்தபுலமையுடன் அவர் எழுதியிருந்த நூல்கள் ஏராளம். ஆனால், இந்தப் பாடங்களின் கல்லூரிப் பாடநூல்கள் அவரது கருத்துகளை ஒருபோதும் விவாதித்ததில்லை.

பகவான் தாஸ், கோவிந்த் வல்லப பந்த், டி.கே. கார்வே, டாக்டர் பி.சி. ராய், புருஷோத்தம் தாஸ் டாண்டன் மற்றும் பி.வி. கானே… இந்தப்பெயர்களைநீங்கள்கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இவர்கள் பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்தவர்கள். ஆனால், அம்பேத்கருடன் ஒப்பிடும்போது அவர்களின்பங்களிப்புசிறியது. இருப்பினும், நாட்டின்உயரியவிருதானபாரதரத்னாஇவர்களுக்குவழங்கப்பட்டது. பகவான்தாஸுக்கு 1955லும், ஜி.பி. பந்துக்கு 1957லும், டி.கே. கார்வேவுக்கு 1958லும், டாக்டர் பி.சி. ராய் மற்றும் பி.டி. டாண்டன் ஆகியோருக்கு 1961லும், பி.வி. கானேவுக்கு 1964ம் ஆண்டும் பாரதரத்னாவழங்கப்பட்டது. பாகிஸ்தானைச் சேர்ந்த கான் அப்துல் கபார் கான்கூட 1987ல் பாரத ரத்னா விருது பெற்றார். நம் எம்.ஜி. ஆருக்கு1988ல்பாரதரத்னாவழங்கப்பட்டது. ஆனால், அம்பேத்கருக்கு அவர் இறந்து 34 ஆண்டுகளுக்குப் பின்னர் 1990ம் ஆண்டு வி.பி.சிங்ஆட்சியில்தான்பாரதரத்னாவிருது வழங்கப்பட்டது.

சரத்பவாருக்கும் நாம் நன்றி சொல்ல வேண்டும். மகாராஷ்டிரா முதல்வராக 1979ம்ஆண்டுஅவர்தான் அம்பேத்கரின்எழுத்துகளையும்உரைகளையும்தொகுத்துபுத்தகங்களாக வெளியிட ஒரு குழு அமைத்தார். மகாராஷ்டிரா அரசின் கல்வித்துறை அவற்றை ஆயிரக்கணக்கான பக்கங்களில் 17 தொகுப்புகளாக வெளியிட்டது.

வால்டேர்மற்றும்தாமஸ்பெய்ன்போன்ற சிந்தனையாளர்களுடன் ஒப்பிடத்தக்க மகத்தான ஒருவரை இந்தியா உருவாக்கியிருக்கிறது என்பதை அந்த நூல்களைப் படிக்கும்போது உணரலாம். அவரது பேனா மையில் அவர் ஆன்மாவும் கலந்திருந்தது. இடிமுழக்கம்போன்றஅவரதுஎழுத்துகள், ஒடுக்கப்பட்ட எவரையும் வீறுகொண்டு எழச் செய்யும். அவரின் சமகாலத்தில் வாழ்ந்த அரசியல் தலைவர்களைவிட அவர் அதிக படித்தவர், ஆழ்ந்து சிந்தித்தவர், விரிவாக பல்வேறு துறைகளில் எழுதியவர்.

1990க்குப் பிறகு பாபாசாஹிப்பின் புகழ் பெருகத்தொடங்கியது. இந்தியாமுழுக்கதலித் மக்கள் அரசியல்ரீதியாக அணிதிரண்டது இதற்கு ஒரு காரணமாக அமைந்தது. தலித் சிந்தனையாளர்கள்பலர்அவரைப்பற்றியும் அவரது சிந்தனைகள் பற்றியும் விரிவாக எழுதஆரம்பித்தார்கள். ஏராளமானநூல்கள் வெளியாகின. அவர் வாழ்ந்த காலத்தில் அவரை எதிர்த்த அரசியல் கட்சியினர்கூட இப்போது அவரை தங்களில் ஒருவராக இணைத்துக்கொள்ள முயல்கின்றன. இடதுசாரியோ, வலதுசாரியோ, பொருளாதார நிபுணர்கள் அவரது கருத்துகளை அடிக்கடி மேற்கோள் காட்டுகின்றனர்.

தவறான அவதூறுகள் மூன்று!

சமூகநீதிக்கும் எதிரான சக்திகள் சில, அம்பேத்கரின் பங்களிப்புகளை சிறுமைப்படுத்தும்விதமாகஅவதூறுகளைப் பரப்புகின்றன. அந்த அவதூறுகளை நாம் விரிவான விளக்கங்கள் சொல்லி மறுக்க வேண்டும்.

அவதூறு 1.

"இந்தியாவின்அரசியலமைப்புசட்டத்தை அம்பேத்கர்உருவாக்கவில்லை. அவர்வெறுமனே அரசியல் நிர்ணய சபை விவாதங்களைக் குறிப்பு எடுத்த ஒருவர் மட்டும்தான்!"

இது மிகவும் அபத்தமான அவதூறு. இந்தியாவின் அரசியலமைப்பு சட்டத்தை 389 உறுப்பினர்களைக் கொண்ட அரசியல் நிர்ணய சபை விவாதித்து அங்கீகரித்தது. ஆனால், இந்தச் சபை ஒரு வெற்றிடத்திலிருந்து அரசியலமைப்பை உருவாக்கவில்லை. அதன்வரைவுக்குழுத்தலைவராக டாக்டர் அம்பேத்கர் பல பொறுப்புகளை ஏற்றார். அரசியலமைப்பு சட்டத்தின் ஒவ்வொரு சட்டப்பிரிவுக்கும்பின்னணிக்குறிப்புதயாரிப்பது, சட்டப்பிரிவுக்கான வரைவுச் சொற்களைப் பரிந்துரைப்பது, அரசியல் நிர்ணய சபையில் சட்டப் பிரிவு பற்றிய விவாதத்தை முன்னெடுத்து நடத்துவது, உறுப்பினர்கள் எழுப்பும்கேள்விகளுக்குவிளக்கம்அளிப்பது,

அந்த விவாதங்களின் அடிப்படையில் சட்டப் பிரிவின் சொற்களை சரிசெய்வது என்று அவருக்கு மிக முக்கியமான பொறுப்பு இருந்தது. அரசியல்நிர்ணயசபையின்விவாதங்களைப் படிக்கும் எவருக்கும் இது தெரியும்.

அரசியல்நிர்ணயசபைஉறுப்பினர்களில் சுமார் 250க்கும் மேற்பட்டவர்கள் வழக்கறிஞர்கள். ஜவஹர்லால் நேரு, சர்தார் படேல், ராஜேந்திர பிரசாத், சி. ராஜகோபாலாச்சாரி ஆகியோர்வழக்கறிஞர்கள்தான். அவர்களில் ஒருவரைஏன்அரசியலமைப்புசட்டவரைவுக் குழுவின் தலைவராக ஆக்கவில்லை?

அம்பேத்கர் தவிர, அரசியலமைப்பு சட்ட வரைவுக் குழுவில் சிறந்த சட்ட மேதைகள் ஆறுபேர்இருந்தனர்அல்லாடிகிருஷ்ணசாமி ஐயர், என். கோபாலசுவாமி அய்யங்கார், கே.எம். முன்ஷி, முகமது சாதுல்லா, பி.எல். மிட்டர், மற்றும் டி.பி. கெய்தான். அவர்களில் ஒருவரை ஏன் வரைவுக் குழுவின் தலைவராக்கவில்லை?

ஏனென்றால், பாபாசாகேப்மட்டுமேஇந்த வேலைக்கு மிகவும் பொருத்தமானவர் என்பது மகாத்மா காந்தி முதல் காங்கிரஸில் இருந்த தலைவர்கள் அனைவருக்கும் தெரியும். அதனால் அவர்கள் டாக்டர் அம்பேத்கருடன் இருந்த கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, அவரை வரைவுக் குழுவின் தலைவராக்கினர்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர், அரசியல் நிர்ணய சபையின்தலைவராகஇருந்தடாக்டர்ராஜேந்திர பிரசாத், அதற்காக அம்பேத்கருக்கு சிறப்பானபாராட்டுகளைவழங்கினார். "வரைவுக் குழுவின்உறுப்பினர்களும்குறிப்பாகஅதன் தலைவரானடாக்டர்அம்பேத்கர்அவர்களும், தன்னுடைய மோசமான உடல்நிலையையும்பொருட்படுத்தாமல்மிகுந்தஆர்வத்துடன் இந்தப் பணியைச் செய்து முடித்தார்கள் என்பது மற்றவர்களைவிட எனக்கு நன்கு தெரியும். அவரைவரைவுக்குழுவில்சேர்த்ததும், அதன்தலைவராகஆக்கியதும்நாங்கள்எடுத்தவற்றிலேயே மிகச் சிறப்பான முடிவு. அம்பேத்கர் தனது தேர்வை நியாயப்படுத்தியது மட்டுமின்றி, அவர்செய்தபணிக்கும்சிறப்புச் சேர்த்துள்ளார்."வரைவுக்குழுஉறுப்பினர்களில்ஒருவரான அல்லாடிகிருஷ்ணசாமிஐயரும் அம்பேத்கரைப் பாராட்டினார். "எனதருமை நண்பர் டாக்டர் அம்பேத்கர் இந்த வரைவுக் குழுவின் தலைவராக அயராது உழைத்தார். இந்தியாவின் அரசியலமைப்பைஉருவாக்கும்பணியைமுன்நின்று எடுத்துச் சென்ற அவரின் திறனையும் தகுதியையும் பாராட்டவில்லை என்றால், நான் கடமைதவறியவனாவேன்" என்றார் அவர்.

இந்தப்பாராட்டுகளுக்குசிகரம்வைத்தது, அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழகம். அம்பேத்கர் முன்பு படித்த கல்விக்கூடம் அது. இந்தியாவின் அரசியலமைப்பு சட்டத்தை வடிவமைத்ததற்காக அம்பேத்கருக்கு 1952ல் சட்டத்துறையில் கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்கி சிறப்பித்தது கொலம்பியா பல்கலைக்கழகம்.

அவதூறு 2.

அம்பேத்கர் பிரிட்டிஷ் அரசின் கையாள். அதனால்தான் அவர் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக செயல்பட்டார். இதன்மூலம் மறைமுகமாக இந்திய விடுதலைக்கு எதிராக அவர் இருந்தார்.

'எதுஅரசியல்'எனஜெர்மன்அரசியல்அறிஞர் ஓட்டோ வான் பிஸ்மார்க் ஒரு தத்துவம் சொல்லியிருப்பார். 'அரசியல் என்பது நாம் விரும்புவதை சாத்தியமாக்கும் ஒரு கலை.' பாபசாஹிப் இதை நம்பினார். தாழ்த்தப்பட்ட சமூகங்களுக்கு உயர்வும் அதிகாரமும் கிடைக்க வேண்டும் என்பது அம்பேத்கரின் கனவு. காங்கிரஸில் சேர்ந்தால் இது சாத்தியமில்லைஎன்றுஅம்பேத்கர்கணித்தார். ஏனெனில், காங்கிரஸ் அப்போது மேல்தட்டு வர்க்கத்தினரால் நிறைந்திருந்தது. சமூகப் பிரச்னைகளை பின்னுக்குத் தள்ளிவிட்டு அரசியல் விடுதலையையே அது பேசியது. எனவேதான்அவர்காங்கிரஸைகடுமையாக எதிர்த்தார். சமூகசீர்திருத்தங்கள்செய்வதற்கு அதன் தலைவர்களை சுயபரிசோதனை செய்ய வைத்தார். இப்படி ஒருவித நெருக்கடியை ஏற்படுத்தி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏராளமான உரிமைகளை அவரால் சுதந்திரத்துக்கு முன்பும் பின்பும் பெற முடிந்தது. "நம்மைஅடிமைப்படுத்தியவர்களிடம்முறையிடுவதால் எப்போதுமே இழந்த உரிமைகளைமீண்டும்பெறமுடியாது. ஓயாதபோராட்டங்கள் மூலமே உரிமைகளை மீண்டும் அடைய முடியும். ஆடுகளைத்தான் பலி கொடுக்கிறார்கள், சிங்கத்தை அல்ல" என்று அம்பேத்கர் சரியாகச் சொன்னார்.

பிரிட்டிஷார் முன்போ, மற்றவர்கள் முன்போபணிந்துநின்றுபதவிகளோ, தனிப்பட்டஆதாயமோபெற்றுக்கொள்ளும்இயல்பு கொண்டவர்அல்லஅம்பேத்கர். அவர்காலத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தின் தன்னிகரற்ற தலைவராக இருந்தவர் அவர். அமெரிக்காவில்ஒருபிஹெச்.டி, லண்டனில்ஒருபிஹெச்.டி முடித்துவிட்டு லண்டனில் சட்டம் படித்த பாரிஸ்டர். இவ்வளவு உயரிய தகுதிகளுடன் அம்பேத்கர்எந்தஒருபதவிக்கும்தவிர்க்கமுடியாமல்தேர்வுசெய்யப்படுகிறஆளுமையாக இருந்தார். அரசியல் சட்ட வரைவுக் குழுவுக்கும் அவரைத் தவிர வேறொரு தலைவரை காங்கிரஸ்கட்சியினராலேயேயோசிக்கமுடியவில்லையே! நேரு அமைச்சரவையிலிருந்து மத்திய அமைச்சர் பதவியைத் தூக்கியெறிந்துவிட்டுவந்தார்அவர். அரசபதவிகள் பெரிதில்லை என்ற அவரின் மனநிலை இதிலிருந்து புரியும்.

வைசிராய் கவுன்சிலில் உறுப்பினராக இருந்து அமைச்சர் பதவி வகித்த காங்கிரஸ்காரர்கள் அனைவரும், 1942ல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை காந்தி தொடங்கியபோது ராஜினாமா செய்தார்கள். அதன்பிறகும் அம்பேத்கர் தொடர்ந்து பதவியில் இருந்ததை விமர்சனம் செய்கிறார்கள். ஆனால், அம்பேத்கர் அரசியலில் காந்திக்கு எதிரானநிலையில்தானேஇருந்தார்! அதுமட்டுமில்லை, இந்துமகாசபைமற்றும்முஸ்லிம் லீக் கட்சியினரும் காந்தியின் அழைப்பைப் புறக்கணித்துவிட்டுவைசிராய்கவுன்சிலிலும் மாகாண சட்டமன்றங்களிலும் அமைச்சர்களாகத் தொடர்ந்தார்கள்.

'காங்கிரஸை எதிர்ப்பவர்கள் எல்லாம் தேசத்துக்கும் தேச விடுதலைக்கும் எதிரானவர்கள்'என்றவாதமேதவறானது. விடுதலை விஷயத்திலேயே அவர் காங்கிரஸுடன் முரண்பட்டார். 'சமூக விடுதலை இல்லாமல் அரசியல் விடுதலை எதையும் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தரப் போவதில்லை' என்பது அம்பேத்கரின் ஆழமான கருத்து. 'அப்படிப் பட்ட விடுதலை, பிரிட்டிஷ் கொடுங்கோன்மைக்கு பதிலாக உயர்சாதி கொடுங்கோன்மையை மட்டுமே ஏற்படுத்தும்' என்றார் அவர்.

வரலாற்றுப் பாடங்களை அவர் அறிந்திருந்தார். 1776ம்ஆண்டுஅமெரிக்காஅரசியல் விடுதலைபெற்றது. ஆனால், அங்குஅடிமை முறையை ஒழிக்க அடுத்து 87 ஆண்டுகள் ஆனது. அந்த அடிமைத்தன ஒழிப்பும் வெறுமனே காகிதத்தில் மட்டுமே சாத்தியமானது. 1960களில்மார்ட்டின்லுதர்கிங்கின்இயக்கம் உருவெடுக்கும்வரைகூட அங்குஇனவெறித் தாக்குதல்களும், நிறபேதமும் தொடர்ந்தது. அமெரிக்கா விடுதலை பெற்று 250 ஆண்டுகளுக்கு மேலாகியும் வெள்ளையர்களுக்கு சமமான சமூக விடுதலையை அங்கு கருப்பினத்தவர்கள் பெறவில்லை என்பதே யதார்த்தம்.

அமெரிக்காவில் வசிக்கும் கருப்பினத்தவர்களைவிடஇந்தியாவில்தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர்மிகமோசமானநிலையில்இருக்கிறார்கள் என அம்பேத்கர் அச்சப்பட்டார். நிறுவனமயமாக்கப்பட்ட ஒடுக்குமுறை இந்தியாவில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நிகழ்ந்துவருகிறது. அம்பேத்கரின் அச்சம் சரிதான் என்பதை சூழல் உணர்த்துகிறது. சுதந்திரம்அடைந்து 76 ஆண்டுகள்கடந்தும் கூட, நாட்டின் எங்காவது ஒரு மூலையில் தினம் தினம் சாதியக் கொடுமைகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

அவதூறு 3. அம்பேத்கர் வெறும் தலித் தலைவர் மட்டுமே!

அம்பேத்கர்என்றமாபெருந்தலைவரின் அத்தனை உழைப்பையும் புறக்கணித்துவிட்டு அவரை சிறுமைப்படுத்தும் அவதூறு இது. அம்பேத்கரின்உரைகளையும்எழுத்துகளையும்படித்தால், அவர்வெறுமனேதாழ்த்தப்பட்டவர்களின் விடுதலைக்காக மட்டும் பாடுபட்ட தலைவர் இல்லை என்பது புரியும். தொழிலாளர்கள், பெண்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் சிறுபான்மையினர்என்றுபலரின்உரிமைக்காகவும் அவர் உழைத்தார். இந்த எல்லா பிரிவினரின் உரிமைகளுக்காகவும் பல பிரிவுகளை அரசியல் சட்டத்தில் சேர்க்க அவர் காரணமாக இருந்தார். மூன்று உதாரணங்களை மட்டும் சொல்கிறேன்.

முதலாவதாக, தொழிலாளர்கள். 1930களில் அம்பேத்கர் தொழிற்சங்கம் சார்ந்த வழக்குகளில் வாதாடும் முன்னணி வழக்கறிஞராக இருந்தார். 1936ம் ஆண்டு அவர் ஆரம்பித்தகட்சியின்பெயர், சுதந்திரத்தொழிலாளர் கட்சி. வாடகைதாரர்கள், விவசாயக் கூலிகள் மற்றும் தொழிற்சாலைப் பணியாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் கட்சியாக இது இருந்தது. 1942 முதல் 1946 வரை வைசிராய் கவுன்சிலில் இணைந்து தொழிலாளர்நலஅமைச்சராகஅவர்செயல்பட்டார். வேலை நேரத்தை 10 மணி நேரத்திலிருந்து 8 மணிநேரமாகக் குறைப்பது உள்ளிட்ட பல தொழிலாளர்சீர்திருத்தங்களைஅவர்கொண்டுவந்தார்.

இரண்டாவதாக, பெண்கள். "ஒருசமூகத்தில்இருக்கும்பெண்கள்அடைந்தமுன்னேற்றத்தைக்கொண்டேஅந்தச்சமூகம்அடைந்த முன்னேற்றத்தைக்கணக்கிடலாம்"என்னும் அவரதுமேற்கோளிலிருந்துபாலினச்சமத்துவம்தொடர்பானஅவரின்சிந்தனையைஅறியலாம். பெண்கல்வி, திருமணத்திற்கான குறைந்தபட்சவயதைஉயர்த்துதல், குடும்பக் கட்டுப்பாடு, ஆண்களுடன் இணைந்து அரசியல்மற்றும்சமூகப்போராட்டங்களில்பெண்களும் ஈடுபடுதல் என்று பெண்கள் விடுதலைக்காக பல செயல்பாடுகளை அவர் பரிந்துரைத்தார். ஏற்கெனவே குறிப்பிட்டது போல, அவர் வடிவமைத்த இந்து தனிநபர் சட்டமும் பெண்களின் விடுதலைக்கானதாகவே இருந்தது.

மூன்றாவது, இதரபிற்படுத்தப்பட்டவகுப்பினர்கள் (OBCs). பிற்படுத்தப்பட்ட சமூகத் தலைவர்களை அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர்கூட்டமைப்பைஉருவாக்குங்கள்என அம்பேத்கர் ஊக்கப்படுத்தினார். நேருஅமைச்சரவையிலிருந்துசட்டஅமைச்சர் பதவியை ராஜினாமா செய்ததற்கு அவர் இரண்டு காரணங்களைச் சொன்னார். ஒன்று, இந்து தனிநபர் சட்டம் நிறைவேற்றப்படாதது. இரண்டாவது, நேரு அரசு பிற்படுத்தப்பட்டோர்நலனுக்காகஎதுவும்செய்யவில்லைஎன்றஅதிருப்தி. தனதுராஜினாமா கடிதத்தில்அம்பேத்கர்கூறியதுஇது:"பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான பாதுகாப்பை எதையும் அரசமைப்புச் சட்டம் கொண்டிருக்கவில்லை என்பதை எண்ணி நான் மிகவும் வருந்தினேன். இனி குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் ஆணையத்தின் பரிந்துரைகளின்அடிப்படையில், அரசுஅவற்றைநிறைவேற்ற வேண்டும். நாம் அரசமைப்பு சட்டத்தை நிறைவேற்றி ஓராண்டிற்கு மேலாகிறது. ஆனால், பிற்படுத்தப்பட்டோர்ஆணையத்தைநியமிப்பதுபற்றிஅரசுசிந்திக்கவேஇல்லை."பாபாசாஹிப்பிற்படுத்தப்பட்டவகுப்பினர்நலன்களை தன் இதயத்தில் தாங்கியிருந்தார் என்பதை இது காட்டுகிறது.

என் சொந்த அனுபவம்:

மகாத்மாகாந்தியும்டாக்டர்அம்பேத்கரும் தங்கள்நம்பிக்கைகளில்முரண்பட்டவர்கள். உலகத்தை வெவ்வேறு கோணத்தில் பார்த்தவர்கள். சாதி அமைப்பைதீவிரமாக ஆதரித்தவர் காந்தி. பெரிய தொழிற்சாலைகளுக்கு எதிராகவும் இருந்தார். முதலாளிகளும் நில உடைமையாளர்களும்ஏழைமக்களைஆதரிக்க வேண்டும் என்று கூறி வந்தவர். கிராம சுயாட்சியை அவர் ஆதரித்தார். இந்த ஒவ்வொருவிஷயத்திலும்அம்பேத்கரின்கருத்து நேரெதிராக இருந்தது.

கிராம பஞ்சாயத்துகள் குறித்த அம்பேத்கரின் கருத்து சரியாகவே இருந்தது என்பதை ஒரு ஐ.ஏ.எஸ் அதிகாரியாக என் தனிப்பட்ட அனுபவத்தில் அறிந்துகொண்டேன்.

ஒருகிராமப்பஞ்சாயத்துஎன்பதுசிறியகுடியரசுபோலஅதிகபட்சசுயாட்சியுடன்செயல்பட வேண்டும்என்றுகாந்திகனவுகண்டார். அது சட்டஅதிகாரம், நீதிஅதிகாரம்மற்றும்நிர்வாக அதிகாரம்கொண்டுசுயாட்சியுடன்செயல்பட வேண்டும் என்றார் அவர். ஆனால், 'இந்தக் கிராமக் குடியரசுகள் என்பவைதான் இந்தியாவை அழிக்கின்றன. கிராமம் என்பது என்ன? வட்டாரப் பெருமிதம், அறியாமை, குறுகிய மனப்பான்மை, சாதி மற்றும் மத வெறிஆகியவற்றில்திளைத்திருப்பவைதான் கிராமங்கள்' என்று அம்பேத்கர் சாடினார்.

கடந்த1996ம்ஆண்டுமதுரைமாவட்டம் மேலூர் அருகேயுள்ள மேலவளவு ஊராட்சி மன்றத் தலைவரான தலித் சமூகத்தைச் சேர்ந்த முருகேசன், தலித் சமூகத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் இருவர் உள்பட ஆறு பேர் ஓடும் பேருந்தில் சாதி இந்துக்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர். மேல்சாதியினர்கட்டுப்பாட்டைமீறி அவர்கள் உள்ளாட்சித்தேர்தல்களில்போட்டியிட்டார்கள்என்பதேஇந்தப்படுகொலைக்குக் காரணம். ஆச்சர்யம்என்னவென்றால், 1931ம் ஆண்டு அம்பேத்கர் மேலூர் பகுதிக்கு வருகை தந்திருந்தார். அந்தப் பயணம் பற்றி தன்நூலில்விவரிக்கும்அம்பேத்கர், மேலூர் பகுதி சாதிய ஒடுக்குமுறைகளுக்குப் பெயர் பெற்றிருந்தது என்று சொல்கிறார்.

கே. அசோக் வர்தன் ஷெட்டி
ஐ.ஏ.எஸ். (ஓய்வு)

மதுரை மாவட்டத்தில் பாப்பாப்பட்டி, கீரிப்பட்டிமற்றும்நாட்டார்மங்கலம்ஆகியமூன்று ஊராட்சிகளுக்கும் 1996 முதல் 2006 வரை தேர்தல் நடத்த முடியவில்லை. இந்த மூன்று ஊராட்சிகளிலும் ஊராட்சித் தலைவர் பதவியை தலித்துகளுக்கு ஒதுக்கீடு செய்ததை சாதிஇந்துக்கள்ஏற்கவில்லை. அவர்கள்தேர்தலைப் புறக்கணித்தனர். தலித் சமூகத்தினரை வேட்புமனு செய்யவிடாமல் அச்சுறுத்தவும் செய்தனர். இதேபோல விருதுநகர் மாவட்டத்தில் கொட்டாக்காச்சியேந்தல் கிராமத்திலும் இதே பிரச்னை 2001முதல் 2006 வரை தொடர்ந்தது.

சாதி இந்துக்களுக்கே இங்கு நிலங்கள் சொந்தம். தலித்துகள் அவர்கள் நிலங்களில் விவசாயக்கூலிகளாக இருந்தனர். அதனால் வேறுவழியின்றிஅவர்கள்பணிந்தனர். சில சமயங்களில் தலித்துகள் இந்த ஊர்க் கட்டுப்பாட்டை மீறி வேட்புமனு செய்தாலும், உடனடியாக மிரட்டலுக்கு பயந்து அதைத் திரும்பப் பெற்றனர். சிலர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டு, உடனடியாக பதவியை ராஜினாமா செய்ததும்நடந்தது. இப்படியேபலஆண்டுகள் தொடர்ந்தது. இந்த நான்கு ஊராட்சிகளிலும் தேர்தலைநடத்த17முறைசெய்யப்பட்டமுயற்சிகள் தோல்வியடைந்தன. தேர்தலில் தோற்பவர்கள்உண்டு, தேர்தலேநடத்தமுடியாமல் அரசுதோற்றசம்பவம்இது. 2004ம்ஆண்டு அப்போதையமுதல்வர்ஜெயலலிதா, அமைச்சர்ஓ. பன்னீர்செல்வம்தலைமையில்நான்கு அமைச்சர்கள் கொண்ட குழுவை இந்த ஊர்களுக்கு அனுப்பி, சாதி இந்துக்களை சமாதானம் செய்ய முயன்றார். ஆனால், அவர்கள் வளைந்து கொடுக்கவில்லை.

2006ம் ஆண்டு கலைஞர் அவர்கள் முதல்வரானார். ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறைஅமைச்சராக மு.க. ஸ்டாலின் பொறுப்பேற்றார். நான் அந்தத் துறையின் செயலாளராக நியமிக்கப்பட்டேன். மதுரை மற்றும் விருதுநகர் மாவட்ட கலெக்டர்களுடன் இணைந்து அந்த ஊராட்சிகளுக்கு சில நலத்திட்டங்களை அறிவித்தும், கண்டிப்பு காட்டியும் ஒருவழியாக 18வது முயற்சியில் வெற்றிகரமாகத் தேர்தலை நடத்திக் காட்டினோம். எனினும் அந்த நான்கு ஊராட்சித் தலைவர்களையும் சாதி இந்துக்கள் மிரட்டி ராஜினாமா செய்ய வைத்துவிடுவர்களோ என்று நான் கவலைப்பட்டேன். எனவே, சென்னையில் ஒரு விழாவுக்கு ஏற்பாடு செய்தேன். அந்தநான்குஊராட்சிகளின்தலைவர்கள், துணைத் தலைவர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள்சென்னைக்குவரவழைக்கப்பட்டனர். ஒருவிழாவில்முதல்வர்அவர்களை கௌரவித்தார். இப்படி ஒரு விழாவை நடத்தியபிறகுஅவர்களைராஜினாமாசெய்ய வைக்க சாதி இந்துக்கள் துணிய மாட்டார்கள் என நம்பினேன்.

அது மட்டுமில்லை, முதல் ஆறு மாதங்களுக்குஅங்கு ஊராட்சிக் கூட்டங்கள் நடக்கும் போதெல்லாம் சம்பந்தப்பட்ட தாசில்தாரும் வட்டார வளர்ச்சி அலுவலரும் அந்தந்த கிராமங்களுக்குச்சென்றுகூட்டத்தில்சிறப்புப்பார்வையாளர்களாகப் பங்கேற்க வேண்டும் என்று உத்தரவிட்டேன். அந்த அதிகாரிகள் முன்னிலையில் அவர்களை அவமானப்படுத்தமேல்சாதியினர்எதுவும்செய்யமாட்டார்கள் என்று நினைத்தேன். ஒருவழியாக அந்தப் பிரச்னை தீர்க்கப்பட்டது.

வேறு சில மாவட்டங்களிலும் புகார்கள் வந்தன. தலித் ஊராட்சித் தலைவர்களும் ஊராட்சிமன்றஉறுப்பினர்களும்சாதிஇந்துக்களுக்கு சமமாக உட்கார வைக்கப்படாமல் தரையில் உட்கார வைக்கப்படுகின்றனர் என்றுஒருபுகார். இன்னும்சிலஊராட்சிகளில் அவர்கள் அலுவலகத்துக்கு வெளியே நின்று கூட்ட நடவடிக்கைகளை கவனிக்க வேண்டும். கூட்டம் முடிந்ததும் அதற்கான பதிவேட்டில் கையெழுத்து போட்டுவிட்டுப் போய்விட வேண்டும். ஒவ்வொரு மாவட்ட கலெக்டருக்கும் நான், 'உங்கள் மாவட்டத்தில் இருக்கும் தலித் ஊராட்சித் தலைவர்களை அழைத்துக் கூட்டம் போடுங்கள். ஊராட்சியில் அவர்களோ, தலித்ஊராட்சிமன்றஉறுப்பினர்களோ அவமானப்படுத்தப்படுகிறார்களா என்று கேளுங்கள்' என்று உத்தரவிட்டேன். அப்படி ஏதாவதுசம்பவம்நடந்திருந்தால், சாதிஇந்துக்களை சேர்ந்த துணைத் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கு எச்சரிக்கைக் கடிதம் அனுப்புங்கள் என்று கேட்டுக்கொண்டேன். 'இப்படி இனி நடந்தால் நீங்கள் கைது செய்யப்படுவீர்கள்' என்றுகலெக்டர்கள்கண்டித்த பிறகு இந்தப் பிரச்னை நின்றது.

ஆனாலும், அவ்வப்போது இப்படி ஒன்றிரண்டு சம்பவங்கள் நடைபெறும். 2020 அக்டோபரில்கூட இப்படி ஒரு சம்பவம் நடந்தது. தலித்சமூகத்தைச்சேர்ந்தபெண் ஊராட்சித் தலைவர் தரையில் உட்கார்ந்திருக்க, மேல் சாதியைச் சேர்ந்த துணைத் தலைவரும் மற்ற ஊராட்சி மன்ற உறுப்பினர்களும் நாற்காலியில் உட்கார்ந்தபடி கூட்டம் நடத்தினார்கள்.

இந்த 21ம் நூறாண்டிலேயே இதுதான் நிலைமைஎன்றால், 1940களில்எப்படிஇருந்திருக்கும்என்றுகற்பனைசெய்துபாருங்கள்! முன்னேறியமாநிலமானதமிழ்நாட்டிலேயே இதுதான் நிலைமை என்றால், நாட்டின் பிற மாநிலங்களில் எவ்வளவு மோசமாக இருக்கும் என நினைத்துப் பாருங்கள். தேர்தலில் போட்டியிட்டுவென்று ஊராட்சிமன்றத்தலைவராக இருக்கும் ஒரு தலித்துக்கே இதுதான் நிலைஎன்றால், கிராமங்களில்சாதாரணமாக இருக்கும் தலித்துகள் எப்படி நடத்தப்படுவார்கள் என்று யோசித்துப் பாருங்கள்.

சாதிவாரியாகப்படிநிலைகளில்பிரிந்துள்ள நம்சமூகத்தில், காந்திசொல்வதுபோலகிராம ஊராட்சிகளைசட்ட அதிகாரம், நீதிவழங்கும் அதிகாரம்மற்றும்நிர்வாகஅதிகாரம்கொண்ட சுயாட்சிக்குடியரசுகளாகமாற்றுவதுஆபத்தானது. அது சாதி ஒடுக்குமுறையை இன்னும் அதிகமாக்கும்.

அதனால்தான் அம்பேத்கர் சரியாக ஒரு விஷயத்தைச் சொன்னார். "மக்களாட்சி என்பது வெறும் அரசாங்கத்தின் வடிவம் அன்று. உண்மையில்அது ஒருங்கிணைந்த வாழ்க்கைமுறையின்வடிவமாகும். இதுசகமனிதர்களுக்கு மதிப்பும் மரியாதையும் அளிக்கிற மனப்பாங்கை உருவாக்க வேண்டும். இந்தியாவில் நிலவுகிற சாதி அமைப்பானது தேசிய ஒற்றுமையைக் குலைக்கிறது. உண்மையானஜனநாயகத்தைநாம்அடைவதைசாத்தியமில்லாமல் செய்கிறது."

முடிவாக சில வார்த்தைகள்!

இந்தத் தலைமுறையில் அம்பேத்கருக்குக்கிடைக்கும்புகழ்முழுமைஅடைந்துவிடவில்லை. அவருக்கு உரிய மரியாதையையும் அங்கீகாரத்தையும் இன்னமும் நாம் வழங்கிவிடவில்லை என்றே சொல்வேன். அவரின்படைப்புகளைஇந்தியாவின்பெரும்பாலான மனிதர்கள் இன்னும் படித்திருக்கவில்லை, குறிப்பாக மேல்சாதியினர். இதற்கு சாதிரீதியான வெறுப்பும் காரணமாக இருக்கலாம். "என் சமூகத்தில் பிறக்காத ஒருவர் மேதையாக இருக்க முடியாது" என்ற வெறுப்பை அதுவே ஏற்படுத்துகிறது. இன்னொரு காரணத்தை 'சித்தார்த்தா சிண்ட்ரோம்' எனவரையறுக்கலாம். சாக்கியதேசத்தின் அரண்மனை சுவர்களுக்குள் அடைபட்டுக் கிடந்த இளவரசனுக்கு எளிய மக்களின் துயரம் தெரியவில்லை. அதைக் கண்டறிந்த பின்னரே சித்தார்த்தன் புத்தராக மாற முடிந்தது. அம்பேத்கரின் நூல்களைப் படிக்கும் எவரும், தாழ்த்தப்பட்ட மக்களின் துயரை உணர முடியும்.

அறிஞர் தாமஸ் பெயின் மறைந்தபோது அவருக்கு ராபர்ட் கிரீன் இங்கர்சால் அளித்த புகழுரை அப்படியே அம்பேத்கருக்கும் பொருந்தும். "அவர்தாழ்த்தப்பட்டவகுப்பைச் சேர்ந்தவர். அவர் பிறந்த நாட்டில் யாருக்கும் உண்மையான சுதந்திரம் என்பது என்னவென்று தெரியாது. அவர்களுக்கும், அவர்களின் உடைமைகளுக்கும் பாதுகாப்பின்றி, அடிமைச் சங்கிலிகளால் கட்டுண்டு கிடந்தனர். அவர்களுக்கான உரிமைகள் மதகுருமார்கள்மற்றும்மேல்தட்டுபிரபுக்களின்காலடியில் நசுக்கப்பட்டிருந்தது. நீதிக்காக வாதாடுவது என்பதே அங்கு தேசத் துரோகமாக கருதப்பட்டது. அவர் ஒவ்வொரு நிலையிலும் அடக்குமுறையையும், எங்கும் அநீதியையும் கண்டு கொதித்தார். வழிபாட்டுத்தலங்களில்கபடநாடகத்தையும், அரசவையில்பேராசைகொண்டோரையும், அரியாசனத்தில் கொடுங்கோலர்களையும் கண்டார். வலியவர்களுக்கு எதிராக துணிச்சலுடன்போராடிஎளியவர்கள்பக்கம்நின்றார். அதிகாரம் மிக்க சிலர் பக்கம் நிற்காமல், அடிமைப்படுத்தப்பட்டோருக்குஉற்றதுணையாகத்திகழ்ந்தார்."

இந்தியாவின் தாமஸ் பெய்னுக்கு இதைவிட சிறந்த அஞ்சலி இருக்க முடியாது.